செ.வெ.எண்:16 /செப்டம்பர்　　　　　　　　　　　　　　　　நாள்: 14.09.2020

# பத்தரிக்கைச் செய்தி

தருமபுரி மாவட்டத்தில் குறிப்பாக மொரப்பூர், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் தருமபுரி வட்டாரங்களில் அதிகளவில் மக்காச்சோளப் பயிர்விதைப்பு செய்யப்பட்டுள்ளது. மக்காச் சோளம் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் அனைவரும் ஆரம்பம் முதலே, படைப்புழுவினைக் கட்டுப்படுத்தும் விதமாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள, தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திரு.சிவ்சங்கர்சிங் அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மக்காச் சோளம் பயிரிட விரும்பும் விவசாயிகள், கோடை உழவு செய்யும் போது ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு அடியுரமாக இடுமாறு கேட்டுக் கொண்டார். மக்காச் சோளவிதைகளை விதைப்பு செய்யும் முன்னர், கிலோவிற்கு 10 கிராம் நுண்ணுயிர் பூச்சிக்கொல்லியான பேவரியாபேசியானா அல்லது 10 கிராம் தயோமீதாக்சம் 30 சதவீதம் FS என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். வரப்பு ஓரங்களிலும், மற்றும் ஊடுபயிராகவும் தட்டைப்பயறு, எள், சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற பயிர்களை விதைப்பதன் மூலம் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் விவசாயிகள் தங்கள் கிராமத்தில் அனைத்து விவசாயிகளும் ஒரே சமயத்தில் விதைப்பு செய்து மற்றும் சரியான இடைவெளியான 45 x 20 செ.மீஇல் விதை விதைப்பு செய்தால் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். விவசாயிகள் பயிர் விதைப்பு முதல், வயல் முழுவதும் கண்காணித்து இலையின் மேற்புறம் மற்றும் பின்புறம் காணப்படும் முட்டைக் குவியல்களை அழிக்க வேண்டும். பயிர் விதைத்த 7ஆம் நாளில் அசாடிராக்டின் 1 சதவீதம் அல்லது வேப்ப எண்ணெய் 1 லிட்டர் தண்ணீரில் 2 மில்லி கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க விதைத்த உடன் சூரிய விளக்கு பொறி ஏக்கருக்கு 1 எண் மற்றும் இனக்கவர்ச்சி பொறிகள் ஏக்கருக்கு 5 எண்கள் வைத்து கண்காணிக்க வேண்டும். பின்னர் தாய் அந்துப் பூச்சிகள் அதிக அளவு கவர்ந்து கட்டுப்படுத்த ஏக்கருக்கு 20 எண்கள் வீதம் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்க வேண்டும். மெட்டாரைசியம் அனிசோபிலே என்னும் நுண்ணுயிர் பூச்சிக் கொல்லியினை எக்டருக்கு 4கிலோ வீதம் தெளிக்க வேண்டும். புழுக்களின் தாக்குதல் அதிகமாக இருப்பின் எமாமெக்டின் பென்சோயேட் 5 சதவீதம் SG ஏக்கருக்கு 80 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும் அல்லது குளோரோன்டிரினிபுரோல் 18.5 சதவீதம் SC ஏக்கருக்கு 80 மில்லி தெளிக்க வேண்டும் அல்லது ஸ்பைனிடோரம் 11.7 சதவீதம் SC ஏக்கருக்கு 0.5 மில்லி 1 லிட்டர் தண்ணீருக்கு அல்லது நவலூரான் 10 EC 1.5 மில்லி 1 லிட்டர் தண்ணீரில் கலந்து பயன்படுத்தி மக்காச்சோளப் படைப்புழுவினைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு தருமபுரி மாவட்ட மக்காச்சோள விவசாயிகள் பயிரின் அனைத்து நிலைகளையும் கண்காணித்து படைப்புழுவினை முழுமையாகக் கட்டுப்படுத்தி அதிகமகசூல் பெற்று பயனடையுமாறு தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திரு.சிவ்சங்கர்சிங் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**